களங்கப்படுத்துகின்ற வகையிலே விநியோகம் செய்யப்பட்டிருக்கின்றது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல், அவைத் தலைவராக இருக்கும் உங்களுடைய நடவடிக்கை பற்றியும் அதிலே கண்டித்து எழுதப்பட்டிருக்கிறது. எனவே, இது அவை உரிமை மீறினதாக இருக்கின்றது என்பதை நான் தெரிவித்து, இதை அவை உரிமை மீறல் குழுவிற்கு அனுப்பி, தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் எழுப்பிய பிரச்னை பத்திரிகை மீது உள்ளதால், அப்பத்திரிகையின் ஆசிரியருக்கு எழுதிக் கேட்டு, அவர் விளக்கம் பெற்று, பின் என் தீர்ப்பை *அளிக்கிறேன்.

3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

நீரார் சுரங்கப்பாதை வேலையில் ஏற்பட்ட பெரும் வெடி விபத்து குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கோவை மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், வால்பாறை மலையில் நடைபெற்று வருகிற நீரார் சுரங்கப் பாதை வேலையில் 18 4-1979 ஆம் தேதி பெரும் வெடிவிபத்து ஏற்பட்டு இரண்டு தொழிலாளிகள் இறந்தும். சுமார் 25 தொழிலாளர்கள் கடுமையான காயங்கள் பட்டும் உள்ளதால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்கப் பேரவையில் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டு,

(1) திரு. கே. ரமணி,

(2) திரு. ஆர். வெங்கிடு

ஆகியோர் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசர முக்கியமானது என்பது குறித்து மிகச் சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். திரு. ஆர். வெங்கிடு.

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு ; தலைவர் அவர்களே, இரண்டு நாட்களுக்கு முன்பு பொள்ளாச்சி தாலூகா வால்பாறை பகுதியிலே நீராறு அணைக்கட்டுப் பகுதியில் தொழிலாளர்கள் இந்த சுரங்கப் பகுதியில் வேலை செய்து கொண்டிருக்கின்ற நேரத்திலே வெடி விபத்து ஏற்பட்டிருக்கிறது. மலையிலே வெடிவைத்து பாறையைத் தகர்க்கக்கூடிய நேரத்திலே, எந்தவிதமான ஆபத்தும் ஏற்படாத அளவுக்கு சரியான பாதுகாப்புடன், வெடி வைத்து மேற்கொள்ளக்கூடிய வேலைகளை, ஏற்பாட்டை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் செய்ய வேண்டும். அதிகாரிகள் கவனக் குறைவு ஏற்பட்டு, சரியான

*27-4-1979ம் தேதி தீர்ப்பளிக்கப்பெற்றது.

உஷார் நடவடிக்கைகளை அதிகாரிகள் மேற்கொள்ளாததால், இந்த வெடிவிபத்து ஏற்பட்டிருக்கிறது. அதனால் இரண்டு தொழிலாளிகள் இறந்திருக்கிறார்கள். பல தொழிலாளர்கள் கடுமையாக காயம்பட்டு, ஆஸ்பத்திரியிலே அனுமதிக்கப் பட்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஆபத்தான நிலைமை ஏற்படாமல் இருப்பதற்கு, தடுப்பதற்கான அடிப்படையிலே அரசு சரியான நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்று நான் கூறுகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தில், பரம்பிக்குளம் ஆழியாறு திட்டத்தின்கீழ் நடைபெற்று வரும் கீழ்நீரார் சுரங்க வழி வேலைகளில், 4 மீட்டர் தூரம் உள்ளே தள்ளி ஒரு வெடி விபத்து, கடந்த 18 ஆம் தேதியல்ல, 17 ஆம் தேதி மாலை சுமார் 4 மணிக்கு ஏற்பட்டது. அந்த வெடி விபத்து ஏற்பட்ட தற்குக் காரணம் அங்கே மின்னல் அதிகமாக இருந்த காரணத் தினால் ஏற்பட்டது. வெளியிலே வெடி மருந்துகளை எடுத்து வேலை செய்து கொண்டிருந்த நேரத்தில், இந்த மின்னல் களால் அங்கே பொறி ஏற்பட்டு, ஒரு விபத்து ஏற்பட்டது. அதன்காரணமாக, முதலிலே ஒரு குழியிலிருந்து வெடி வெடித்தது. அதற்குப் பின்னாலே, இரண்டு குழிகளிலே தொடர்ந்து வெடி வெடித்தது. அதன்காரணமாக அங்கேயிருந்த இந்துஸ்தான் கன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனியைச் சேர்ந்த போர்மேன் பகால்கர் என்பவரும், லோகோ டிரைவராக பணியாற்றி வந்த பிரபு சத்வா என்ற இருவரும் இறந்திருக்கிறார்கள். மேலும் 20-க்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்திருக்கிறார்கள். காயம் அடைந்தவர்கள் உடனடியாக பக்கத்திலே இருக்கக்கூடிய தனியார் மருத்துவ மனைக்கு கொண்டுபோய் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளனர். 20 பேர்களிலே 6 பேருக்கு இலேசான காயம் இருந்த காரணத்தினாலே, அவர்கள் எல்லாம் சிகிச்சை பெற்று, வெளியே அனுப்பப்பட்டிருக்கிறார்கள். மேலும், இந்த வெடி விபத்து ஏற்பட்டது தெரிந்து, பொதுப் பணித் துறையைச் சார்ந்த அதிகாரிகள் ஸ்தலத்திற்கு சென்று, காயமுற்றவர் களுக்கு தக்க மருத்துவ சிகிச்சை அளிக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறார்கள்.

[முற்பகல் 10-10]

அசிஸ்டென்ட் கமிஷனர் ஆப் லேபர் விரைந்து சென்றிருக் கிறார். இறந்தவர்கள் குடும்பத்திற்கு இந்தத் துக்க செய்தி உடனடியாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதன் மூலம் அங்கு போர்மனாகப் பணியாற்றிய பகால்கர் என்பவர் மனைவி பூனாவில் இருந்து வந்து விட்டார்கள் என்று தெரிகிறது, லோகோ டிரைவராகப் பணியாற்றிய பிரபு சத்வா என்பவர் திருமணமாகாதவர், அவருடைய வீட்டுக்கும் தகவல் அனுப்பப் பட்டிருக்கிறது. இறந்தவர்கள் குடும்பத்திற்கு நஷ்ட ஈட்டுத் தொகை கொடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது.

[திரு. ப. குழந்தைவேலு] [1979 ஏப்ரல் 21

மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்வதைப் போல் அதிகாரிகள் கவனக் குறைவால் இந்த வெடி விபத்து ஏற்படவில்லை என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். ஆகையால் அவையில் மற்ற நடவடிக்கைகளை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லையென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு பேரவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய அவசியமில்லை என்ற காரணத்தால் இதற்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

(4) கவன ஈர்ப்புகள்.

(அ) சென்னை தியாகராநகரில் ஏற்பட்ட தீ விபத்துக் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் செ. சிவசாமி, பொ. உத்திராபதி, ஜே. ஜேம்ஸ், பொ. விஜயராகவன், ஏ.ஆர். மாரிமுத்து, ஓ. சோ. வேலுசாமி, சோ. அழகர்சாமி, து. புருடோத்தமன், ஆர்.இ. சந்திரன் ஜெயபால், சின்னசேலம் மா. சுப்பிரமணியம், சேலம் மு. ஆறுமுகம் ஆகியோர் 41வது விதியின்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்திருக்கிறார்கள். திரு. ஜே. ஜேம்ஸ்...

திரு. ஜே. ஜேம்ஸ் : பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை தியாகராயநகர் சிவசைலம் தெருவில் 16-3-1979 அன்று ஏற்பட்ட தீ விபத்து பற்றியும் அதனால் விளைந்துள்ள உயிரிழப்பு, சொத்திழப்பு பற்றியுமான அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. பி. முசிறிப்புத்தன் : (அமைச்சரின் பேரவை செயலர்) : பேரவைத் தலைவர் அவர்களே, 16-3-79 மாலை சுமார் 2.30 மணிக்கு சென்னை தியாகராயநகர் பகுதியைச் சார்ந்த, சிவசைலம் பிள்ளை, மற்றும் சோலையப்ப நாய்க்கன் தெருவில் ஒரு தீ விபத்து நிகழ்ந்தது. விபத்து நடந்த இடத்தில் போடப்பட்டுள்ள குடிசைகள், திரு. கபாலி என்பவருக்குச் சொந்தமானவை. அவர் குடிசைகள் கட்டி வாடகைக்கு விட்டிருந்தார். குடிசைகள் போடப்பட்டுள்ள நிலம், வேறு நபர்களுக்குச் சொந்தமானது. இந்த விபத்து ஒரு குடிசையின் எரியும் அடுப்பிலிருந்து வந்த தீப்பொறியினால் ஏற்பட்டது எனத் தெரிகிறது. தீயணைக்கும் படையினர் உடனே வந்து